

SHANKAR IAS ACADEMY™

SINCE 2004

Best Academy for Civil Services Exam Coaching

மைக்ரோ நடப்பு நிகழ்வுகள்

அக்டோபர் 2026

TNPSC தேர்வுப் பெட்டகம்

shankariasacademy.com

tnpscthervupettagam.com

உள்ளடக்கம்

தமிழ்நாடு செய்திகள் 2
தேசியச் செய்திகள் 3
சர்வதேசச் செய்திகள் 4
பொருளாதாரச் செய்திகள் 5
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் 6
சுற்றுச்சூழல் செய்திகள் 7
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் 8
மாநிலச் செய்திகள் 9
முன்னெடுப்புகள், திட்டங்கள் மற்றும் பிரச்சாரங்கள் 10
பிரபலமானவர்கள் மற்றும் விருதுகள் 10
நிகழ்வுகள் மற்றும் மாநாடுகள் 12
பாதுகாப்பு பயிற்சிகள் மற்றும் நடவடிக்கைகள் 13
விளையாட்டுச் செய்திகள் 14
முக்கிய தினங்கள் 15

தமிழ்நாடு செய்திகள்

- தமிழ்நாடு முதலமைச்சர் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 2 அன்று சென்னையில் உள்ள கோயம்பேட்டில் விரிவாக்கப்பட்ட வெற்றிப் பயணம் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்
- குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த தகுதியான மணப்பெண்களுக்கு 8 கிராம் எடை கொண்ட 22 காரட் தங்க நாணயம் மற்றும் ஒரு பட்டுப்புடவை வழங்க "அண்ணன் சீர்" என்ற திட்டத்தை தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது.
- தமிழ்நாடு தனது வனப்படையை வலுப்படுத்த ஐந்து ஆண்டுகளில் (2026-27 முதல் 2030-31 ஆம் ஆண்டு வரை) 100.72 கோடி ரூபாயை செலவிட உள்ளது.
- தமிழ்நாட்டின் சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் அணைக்கு அருகே உள்ள தெலுங்கனூரில் 3,000 ஆண்டுகள் பழமையானதாகக் கருதப்படும் ஓர் எழுத்து முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடானது, தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் ஐந்தாம் கட்டத்தின் (NACP-V) இலக்கான 95-95-95 என்பதை 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அடைந்தது.
- எச்.ஐ.வி/எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான மாதாந்திர நிதி உதவியை தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ள நிலையில் பெற்றோர்கள் இருவரையும் இழந்த எச்.ஐ.வி பாதிப்புடன் வாழும் குழந்தைகள் மாதம் ஒன்றுக்கு ரூ.3,000 பெறுவார்கள்; ஒரு பெற்றோரை இழந்தவர்கள் ரூ.2,000 பெறுவார்கள்.
- இந்தியாவில் ஒரு முன்னணி குறைக்கடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுவியல் உற்பத்தி மையமாக தமிழ்நாட்டை மாற்றுவதற்கும் முதலீடுகளை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டு 'தமிழ்நாடு குறைக்கடத்தி சூழலமைப்புத் திட்டம் 2026' தொடங்கப்பட்டுள்ளது.
- கோயம்புத்தூர் காந்திபுரத்தில் பெரியார் அறிவகம் என்ற நூலகம் மற்றும் அறிவியல் மையத்தை தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைத்தார்.
- காசநோய் இல்லா ஊராட்சி முன்னெடுப்பின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள மொத்தம் 2,390 கிராம ஊராட்சிகள் 2025 ஆம் ஆண்டிற்கான காசநோய் (TB) இல்லாத ஊராட்சிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- தெற்கு ரயில்வேயானது தமிழ்நாட்டின் முதல் கண்ணாடி மேற்கூரை கொண்ட ரயில் (Vistadome) பெட்டியை மதுரை-குருவாயூர் விரைவு ரயிலில் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 22 முதல் 2027 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் தேதி வரை சோதனை அடிப்படையில் அறிமுகப் படுத்த உள்ளது.
- பாதிக்கப்படக்கூடிய ஊரகக் குடும்பங்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பை வழங்குவதற்காக 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 20 அன்று தமிழ்நாடு அரசு வெற்றி 150 திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.
- தமிழ்நாடு நில மனை ஒழுங்குமுறை ஆணையத்தை (TNRERA) தமிழ்நாடு அரசு மறு சீரமைத்து, அதன் தலைவராக ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப் பணி (ஐஏஎஸ்) அதிகாரி கே. பணீந்திர ரெட்டியை நியமித்துள்ளது.
- தமிழ்நாடு ஊதியம் வழங்கும் சட்டம் 1951-இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் மூலம், 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 1 முதல் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களின் மாதாந்திர ஊதியம் ₹1.05 லட்சத்தில் இருந்து ₹1.80 லட்சமாக 71% உயர்த்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 28 முதல், தனித்துவமான அடையாள அட்டையைப் (UDID) பயன்படுத்தி மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது உதவியாளர்கள் இலவசமாகப் பேருந்துகளில் பயணம் செய்வதற்கான திட்டம் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது.
- தமிழ்நாடு அரசு 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகள் (BESS) கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளது.

தேசியச் செய்திகள்

- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகம், குஜராத்தின் தீனதயாள் துறைமுகம் (காண்ட்லா), மகாராஷ்டிராவின் ஜவஹர்லால் நேரு துறைமுகம் (நவா ஷேவா), ஒடிசாவின் பாரதீப் துறைமுகம் மற்றும் குஜராத்தின் முந்த்ரா துறைமுகம் ஆகியவற்றை 2025 ஆம் ஆண்டு இந்தியத் துறைமுகங்கள் சட்டத்தின் கீழ் நான்கு துறைமுகங்களை மெகா துறைமுகங்களாக அறிவித்துள்ளது.
- கால்நடை காப்பீட்டுச் சேவைகளை நெறிப்படுத்துவதற்காக புது தில்லியில் மத்திய மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் பசுதன் பீமா இணையதளத்தை தொடங்கி வைத்தார்.
- இந்தியாவின் முதல் இரட்டை எரிபொருள் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) ரயில் குஜராத்தின் அகமதாபாத்தில் உள்ள சபர்மதி ரயில் நிலையத்திலிருந்து கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டது.
- பிரதம மந்திரி மத்ஸ்ய கிசான் சம்ரிதி சாஹ்-யோஜனா (PM-MKSSY) திட்டத்தின் கீழ் 40% பிரீமியம் ஊக்கத்தொகையுடன் நீர்வாழ் உயிரி வளர்ப்பு காப்பீட்டை அரசு ஊக்குவித்து வருகிறது.
- மத்திய நீர் ஆணையத்தின் (CWC) அறிக்கையின்படி, 178 முக்கிய நீர்த்தேக்கங்களில் நீர் சேமிப்பு 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 நிலவரப்படி அதன் மொத்தக் கொள்ளளவில் 70% ஆக குறைந்துள்ளது.
- செம்மொழிகளான அசாமி மொழிக்கான மையம் அசாமின் தேஜ்பூர் பல்கலைக் கழகத்திலும், பெங்காலி மொழிக்கான மையம் மேற்கு வங்கத்தின் விஸ்வ-பாரதி பல்கலைக் கழகத்திலும், மராத்தி மொழிக்கான மையம் மகாராஷ்டிராவின் புனேவில் உள்ள டெக்கான் கல்லூரியிலும் பாலி மொழிக்கான மையம் ஒடிசா மத்திய பல்கலைக் கழகத்திலும், பிராகிருத மொழிக்கான மையம் குஜராத் மத்திய பல்கலைக் கழகத்திலும் அமைக்கப்படவுள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் (WHO) மதிப்பீடுகளின்படி, 2023 ஆம் ஆண்டில் இந்தியாவின் பிறப்புக்கால வாழ்நாள் எதிர்பார்ப்பு 71 ஆண்டுகளை எட்டியுள்ளது, இது பாகிஸ்தானின் 68.2 ஆண்டுகளை விட அதிகம், ஆனால் வங்கதேசத்தின் 72.7 ஆண்டுகளை விடக் குறைவு.
- மத்தியப் பணியாளர் தேர்வாணையம் ஆனது (UPSC) 1926 ஆம் ஆண்டு நிறுவப் பட்டதிலிருந்து அதன் நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் வகையில், 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 1 அன்று 100 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.
- பயணிகள் வாகனங்களுக்கான பெருநிறுவன சராசரி எரிபொருள் திறன் (CAFE)-III விதிமுறைகளை மத்திய அரசு அறிவித்துள்ளது, இது 2027 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் 2032 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை பொருந்தும்.

- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் காசநோய் முக்த் பாரத் அபியானின் கீழ் சுகாதாரத்திற்கான கூட்டுக் குழுக்களை (JOSH - சுகாதாரத்திற்கான கூட்டுப் படை) 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 8 அன்று புது தில்லியில் தொடங்கி வைத்தார்.
- சேர்க்கை உற்பத்திக்கான தேசிய உத்தியின் (NSAM) 2.0 பதிப்பை மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) அறிமுகப்படுத்தியது.
- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகமானது 2029 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் பயணிகள் கார்களுக்கான BS-VII உமிழ்வுத் தரநிலைகளை அறிமுகப் படுத்த முன்மொழிந்துள்ளது.
- தெற்கு இந்தியப் பெருங்கடலில் உள்ள மீன்பிடி வளங்களைப் பாதுகாக்கவும், நிலையான முறையில் பயன்படுத்தவும் நடைமுறைக்கு வந்த தெற்கு இந்தியப் பெருங்கடல் மீன்பிடி ஒப்பந்தத்தில் (SIOFA) இந்தியா இணைவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- கர்நாடகாவின் கார்வாரில் இந்தியாவின் முதல் உள்நாட்டு பல்நோக்குக் கப்பலான ஐஎன்எஸ் சமர்த்தக் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.
- இந்திய கடற்படையின் மூன்றாவது மாஹே-வகுப்பு நீர்மூழ்கி எதிர்ப்பு ஆழமற்ற நீர் கப்பலான ஐஎன்எஸ் மாங்க்ரோல் (INS Mangrol), மகாராஷ்டிராவின் மும்பையில் நாட்டுக்கு அர்ப்பணிக்கப் பட்டது.
- மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சரால் புது தில்லியில் உள்ள வாணிஜ்ய பவனில் தேசிய உத்திசார் வர்த்தகக் கட்டுப்பாட்டு மையம் (NSTCC) தொடங்கப் பட்டது.
- கடல் மட்டத்திலிருந்து சுமார் 3,500 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள லே (Leh) பகுதியில் லடாக் ஒன்றியப் பிரதேசம் ஓர் உயர் நீதிமன்ற அமர்வைப் பெற்றுள்ளது.
- இந்தியாவின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த பீனால் மற்றும் அசிட்டோன் ஆலையை மேற்கு வங்கத்தின் ஹால்டியாவில் இந்தியா தொடங்கியது
- மத்திய அமைச்சரவை தேசிய சமூக உதவித் திட்டத்தை (NSAP) பிரதான் மந்திரி சமாஜிக் சகாயதா யோஜனா என மறுபெயரிடப்பட்டுள்ளதுடன் 2026-27 முதல் 2030-31 தொடர ஒப்புதல் அளித்தது.
- பகிரப்பட்ட பௌத்த பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காக இந்தியா மற்றும் இலங்கை கொழும்பில் உள்ள கங்காராமய கோவிலில் சம்ஹிதா (SAMHiTA - தெற்காசிய கையெழுத்துப் பிரதி வரலாறுகள் மற்றும் உரை ஆவணக் காப்பகம்) திட்டத்தைத் தொடங்கின.
- இரத்த சோகைத் தடுப்பு, பரிசோதனை மற்றும் சிகிச்சை ஆகியவற்றை வலுப்படுத்தும் நோக்கில், 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இந்திய அரசாங்கம் அனீமியா முக்த் பாரத் (AMB) திட்டத்தை 7×7×7 உத்தியாகத் திருத்தியமைத்தது.

சர்வதேசச் செய்திகள்

- இந்தியாவின் ஒருங்கிணைந்த கட்டண இடைமுகத்தை (UPI) ஏற்றுக்கொள்ளும் முதல் கரீபிய நாடாக டிரினிடாட் மற்றும் டொபாகோ மாறவுள்ளது.
- எகிப்தின் தக்லா சோலையில் (Dakhla Oasis) உள்ள பிர் அல்-ஷகாலாவில் கி.பி. 3 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது 4 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த 1,700 ஆண்டுகள் பழமையான பிரமிடு வடிவக் கல்லறையை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

- இந்தியா 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 1 நிலவரப்படி தஜிகிஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு ஆகாஷ் வான் பாதுகாப்பு அமைப்பை ஏற்றுமதி செய்துள்ளது.
- தஜிகிஸ்தானில் உள்ள ரோகுன் நீர்மின் திட்டம் அதன் திட்டமிடப்பட்ட உயரமான 335 மீட்டரை நெருங்கி வருகிறது; இது கட்டி முடிக்கப்பட்ட பிறகு உலகின் மிக உயரமான அணையாக மாறும்.
- செயற்கை நுண்ணறிவுத் (AI) தொழில்நுட்பத்திற்கு கூட்டாட்சி அரசாங்கத்தின் எதிர் வினையை ஒருங்கிணைக்க, அமெரிக்கா ஒரு புதிய "சூப்பர் இன்டெலிஜென்ஸ் ஃபோர்ஸ்/அதி உயர் அறிவுத்திறன் கொண்ட படை" எனும் சிறப்புப் படையை அறிவித்துள்ளது.
- எகிப்தின் நியூ அலாம்யினில் நடைபெற்ற நாற்கர உச்சிமாநாட்டிற்குப் பிறகு எகிப்து, சூடான், எரித்திரியா மற்றும் சோமாலியா ஆகிய நாடுகள் எல் அலாம்யின் கூட்டறிக்கையை வெளியிட்டன.
- அமெரிக்கப் போர்த் துறையானது போர்ட்ரெஸ் அமெரிக்கா (FORTRESS America) எனும் பாதுகாப்பு முன்னெடுப்பைத் தொடங்கியது.
- கோர்கா மாவட்டத்தில் உள்ள நேபாளத்தின் புத்தி கண்டகி ஆற்றில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது, இது உள்கட்டமைப்புகளை சேதப்படுத்தியது.
- தாய்லாந்து வங்கியுடன் இணைந்து, சர்வதேச நாணய நிதியம் (IMF) மற்றும் உலக வங்கிக் குழுமம் (WBG) தாய்லாந்தின் பாங்காக்கில் பாங்காக் திட்டவரைவை (Bangkok Blueprint) வெளியிட்டன.
- துருக்கியின் தெற்கே உள்ள அண்டால்யாவின் கெகோவா தீவுக்கு அருகே ஆரம்பகால வெண்கலக் காலத்தைச் சேர்ந்த 4,400-4,700 ஆண்டுகள் பழமையான உலகின் பழமையான கப்பல் சிதைவை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர்.
- ராணுவ உற்பத்தி, பாதுகாப்பு திறன்கள், தொழில்நுட்ப பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக துருக்கி, கத்தார், பாகிஸ்தான் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகள் தோஹாவில் பத்ர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டன.
- அமெரிக்க எரிசக்தி துறை ஹீலியத்தை ஒரு முக்கியமான பொருளாக அறிவித்தது, இதன் மூலம் அதன் முக்கியமான பொருட்களின் பட்டியலில் 20வது பொருளாக ஹீலியம் சேர்க்கப்பட்டுள்ளது.

பொருளாதாரச் செய்திகள்

- நிலையான கடல்சார் உள்கட்டமைப்பு மற்றும் பெருங்கடல் பொருளாதாரத் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக, இந்தியாவின் முதல் நீலப் பத்திரத்தை (Blue bond) சாகர்மாலா பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (SMFCL) நிறுவனம் வெளியிட உள்ளது.
- நப்கிசான் ஃபைனான்ஸ் லிமிடெட் (NABKISAN Finance Limited) நிறுவனமானது தண்ணீர், சுகாதாரம் மற்றும் தூய்மை (WASH) துறைக்காக பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப்பட்ட இந்தியாவின் முதல் சமூகப் பத்திரத்தை தேசிய பங்குச் சந்தையில் (NSE) பட்டியலிட்டு உள்ளது.

- இந்திய ஏற்றுமதியில் 40.7% உயர்வு இருந்தபோதிலும், 2026 ஆம் ஆண்டு ஜனவரி-செப்டம்பர் மாத காலகட்டத்தில் சீனாவுடனான இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை 105.93 பில்லியன் அமெரிக்க டாலர்களைத் தாண்டியுள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டில் இந்தியாவின் தேங்காய்நார்க் கயிறு ஏற்றுமதி ₹6,614.40 கோடியை எட்டியுள்ளது. இது 2014-15 ஆம் ஆண்டிலிருந்து 305.70% அதிகரிப்பாகும்.
- கர்நாடகா, மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் புதிய சரக்கு மற்றும் சேவை வரி (GST) நிலைக்குழுவின் நிரந்தர உறுப்பினர்களாக இருக்கும்.
- "ரியார்ம் ஐரோப்பா" (Rearm Europe) முன்னெடுப்பின் கீழ் ஏற்பட்ட தேவையின் உந்துதலால், ஐரோப்பாவிற்கு பாதுகாப்பு தளவாடங்களை ஏற்றுமதி செய்யும் 3வது பெரிய நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) பேசல் வங்கி மேற்பார்வைக் குழுவின் (BCBS) தர நிலைகளுடன் ஒத்துப் போகும் வகையில் தனது மூலதனப் போதுமான அளவு கட்டமைப்பை திருத்தியுள்ளது, புதிய லெவரேஜ் விகித விதிகள் 2027 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்கு வரும்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

- அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள சான் பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற தனது DevDay 2026-வது மாநாட்டில், OpenAI நிறுவனம் GPT-6.1 Sol மற்றும் Dots AI முகவர்களை (AI agents) அறிமுகப்படுத்தியது.
- ஐரோப்பிய விண்வெளி முகமையின் (ESA) வியாழனின் பனி நிலவு ஆய்வுக் கலம் (JUICE) தனது மூன்றாவது பூமியின் ஈர்ப்பு விசை உதவியை 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 28 அன்று நிறைவு செய்தது.
- HS 0209+0832 என்ற வெள்ளைக் குறுமீனை சுற்றி வரும் இரண்டாம் தலைமுறை கோள் ஒன்றின் சாத்தியக்கூறை வானியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ஐரோப்பா மற்றும் சீனாவைச் சேர்ந்த அறிவியலாளர்கள் உலகின் முதல் செயல்படும் அணுக்கரு கடிகாரங்களை (nuclear clocks) அறிவித்துள்ளனர்.
- உலக சுகாதார நிறுவனமானது செர்வாவாக் தடுப்பூசிக்கு முன்-தகுதி அங்கீகாரத்தை வழங்கியதன் மூலம் இந்த அங்கீகாரத்தைப் பெறும் இந்தியாவிலேயே தயாரிக்கப் பட்ட முதல் குவாட்ரிவலன்ட்/நாற்கூறு மனித பாப்பிலோமா வைரஸ் தடுப்பூசியாக இது மாறியுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 11 அன்று நாசாவின் பெர்சவரன்ஸ் உலாவி மற்றொரு கிரகத்தில் அதிக தூரம் பயணித்ததற்கான புதிய சாதனையை படைத்தது.
- செவ்வாய் கிரகம் மற்றும் அதன் இரண்டு நிலவுகளை (போபோஸ் மற்றும் டீமோஸ்) ஆய்வு செய்வதற்காக ஜப்பானின் செவ்வாய் கிரகத்தின் நிலவுகள் ஆய்வுத் திட்டம் (MMX) தொடங்கப்பட்டுள்ளது.
- ஜப்பானின் ககோஷிமா மாகாணத்தில் உள்ள கியூஷு தீவின் தெற்கே பெரும்பாலும் கடலடியில் மூழ்கியுள்ள சூப்பர் எரிமலையான கிகை கால்டெராவிற்கு அடியில் புதிய மாக்மா குவிந்து வருவதை அறிவியலாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.
- சர்வதேச வானியல் ஒன்றியத்தின் (IAU) சிறு கோள் மையம் ஆனது 2026 ED138-ஐ ஒரு சாத்தியமான குறுங்கோளாக அறிவித்தது.

சுற்றுச்சூழல் செய்திகள்

- இந்தியாவில் அறிவிக்கப்பட்ட 58 புலிகள் காப்பகங்களின் மேலாண்மையை மதிப்பிடுவதற்காக, புது தில்லியில் புலிகள் காப்பகங்களுக்கான 6-வது மேலாண்மை செயல்திறன் மதிப்பீடு (MEE-TR 2026) தொடங்கப்பட்டுள்ளது.
- ஆராய்ச்சியாளர்கள் கேரளாவின் கொல்லம் மாவட்டத்தில் 'பெகோனியா ராஜ்விக்ரமனீ' என்ற புதிய பெகோனியா தாவர இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.
- அசாமில் உள்ள ஒராங் தேசியப் பூங்கா மற்றும் புலிகள் காப்பகத்தில் முதல்முறையாக இந்திய மயில் (பாவோ கிரிஸ்டேட்டஸ்) பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ஆந்திரப் பிரதேச வன வளர்ச்சிக் கழகத்திற்கு (APFDC) இந்திய வன மற்றும் மரச் சான்றிதழ் திட்டத்தின் (IFWCS) கீழ் இந்தியாவின் முதல் PRAMAAN சான்றிதழ்களை மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் வழங்கினார்.
- மத்திய அரசு, மிகவும் நச்சுத் தன்மை வாய்ந்த மற்றும் பொதுவான (Non-selective) களைக்கொல்லியான பாராகுவாட் டைகுளோரைடை அதிகாரப்பூர்வமாக தடை செய்துள்ளது.
- தெற்கு இந்தியப் பெருங்கடலில் உள்ள கெர்குலன் தீவுகளில் இருந்து பைகோசெலிஸ் கெர்குலென்சிஸ் (Pygoscelis kerguelensis) என்ற புதிய ஜென்டூ பென்குயின் இனத்தை ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்
- வன நிர்வாகத்தை வலுப்படுத்தவும், குஜராத்தின் பர்தாவை ஆசிய சிங்கங்களுக்கான இரண்டாவது வாழ்விடமாக மேம்படுத்தவும், போர்பந்தர் வனக்கோட்டத்தை குஜராத் மாநிலம் மறுசீரமைத்துள்ளது.
- இந்திய விலங்கியல் ஆய்வகத்தின் (ZSI) அறிவியலாளர்கள் வங்காள விரிகுடாவில் இருந்து பாத்திமைரஸ் பெர்ப்ளெக்சஸ் (Bathymyrus perplexus) என்ற புதிய கடல் விலாங்கு மீன் இனத்தை உறுதி செய்துள்ளனர்.
- பெருவின் அரேகிபாவில் உள்ள ஆண்டிஸ் மலையில் 4,800 மீட்டருக்கு மேல் லியோலேமஸ் ஆர்ச்சிபென்சிஸ் (Liolaemus archipensis) என்ற புதிய பல்லி இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- குஜராத்தின் தாகோத் மாவட்டத்திலுள்ள தன்பூர் தாலுகா, அகஸ்வானி கிராமத்தில் அரிய வகை இருதலை ஓநாய் பாம்பு மீட்கப்பட்டது
- வலசைப் பறவைகள் பாதுகாப்பை ஆதரிப்பதற்காக மத்திய ஆசிய பாதுகாப்பு வலையமைப்பு (CACN) 'மத்திய ஆசிய ஃப்ளைவே டிஜிட்டல் மையத்தை' தொடங்கியுள்ளது.
- தமிழ்நாட்டின் நெல்லை வனவிலங்கு சரணாலயத்தின் மலைச் சரிவுகளில் தாவரவியலாளர்களால் செரோபெஜியா தமிழ்நாடுயென்சிஸ் (Ceropegia tamilnaduensis) என்ற புதிய தாவர இனம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- அறிவியலாளர்கள் சீனாவின் யுன்னான் மாகாணத்தில் டியான்ஜுனஸ் ரெக்ஸ் (Dianjunus rex - D-rex) என்ற ராட்சத பூஞ்சையைக் கண்டுபிடித்தனர்.
- சண்டிகரின் சுக்னா சதுப்புநிலம் மற்றும் உத்தரபிரதேசத்தின் சௌஜ் ஜீல் ஆகியவை ராம்சர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன, இதன் மூலம் இந்தியாவின் மொத்த ராம்சர் தளங்களின் எண்ணிக்கை 103 ஆக உயர்ந்துள்ளது.
- இந்தூரில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி சபை (ICAR)-தேசிய சோயாபீன் ஆராய்ச்சி நிறுவனம் (NSRI) ஒரு ஹெக்டேருக்கு சுமார் 20 குவிண்டால் ஆரம்ப மகசூல் தரக்கூடிய புதிய சோயாபீன் இரகங்களான NRC 268 மற்றும் NRC 270 ஆகியவற்றைக் காட்சிப்படுத்தியது.

- மறைமுக பட்டினியைப் போக்க இந்தியா 'குஃப்ரி ஜமுனியா' என்ற உயிரிச்சத்து செறிவூட்டப்பட்ட ஊதா நிற உருளைக்கிழங்கு வகையை உருவாக்கியது.
- மெரோபிடே குடும்பம் மற்றும் கோராசிஃபார்ம்ஸ் வரிசையைச் சேர்ந்த இளம் ஐரோப்பிய தேனீ உண்ணும் பறவை (மெராப்ஸ் ஏபியாஸ்டர்) தமிழ்நாட்டின் சென்னையில் முதன்முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
- கேரளாவின் கோழிக்கோடு மாவட்டத்தில் உள்ள ஜானகிக்காடு வனப்பகுதியில் புள்ளி-வயிற்றுக் கழுகு ஆந்தை (புபோ நிபாலென்சிஸ் / கேதுபா நிபலென்சிஸ்) பதிவு செய்யப்பட்டுள்ளது.
- தென் இந்தியாவில் ரைசிடா குவாட்ரிஸ்பினோசா (Rhysida quadrispinosa), ரைசிடா கூர்கென்சிஸ் (Rhysida coorgensis) மற்றும் ரைசிடா நெய்யரென்சிஸ் (Rhysida neyyarensis) ஆகிய மூன்று புதிய பூரான் இனங்களை அறிவியலாளர்கள் விவரித்துள்ளனர்.
- அரிசோனாவில் உள்ள சிரிகாஹுவா அதிகாரப் பூர்வமாக அமெரிக்காவின் 64வது தேசியப் பூங்காவாக மாறியது
- ஆராய்ச்சியாளர்கள், மணற்கெளுத்தி மற்றும் மின்சாரத் திருக்கை ஆகிய இரண்டு புதிய கடல் மீன் இனங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.
- அசாம் மாநிலத்தின் கோல்பாரா மாவட்டத்தில் உள்ள கிணறுகளில் கிட்சாக் நகனா மற்றும் ரக்தமிச்சிஸ் அன்சி ஆகிய இரண்டு புதிய நிலத்தடி மீன் சிற்றினங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- இந்தியாவின் முதல் பனிச்சிறுத்தை எண்ணிக்கை மதிப்பீடு (SPAI) இந்திய இமயமலைப் பகுதிகளில் 718 பனிச்சிறுத்தைகள் இருப்பதாக மதிப்பிட்டுள்ளதுடன் இதில் லடாக்கில் மட்டும் 477 பனிச்சிறுத்தைகள் உள்ளன.
- அருணாச்சலப் பிரதேசத்தின் சாங்லாங் மாவட்டத்தில் ஓபியோர்ஹைசா ஷிடியென்சிஸ் (Ophiorrhiza shidiensis) மற்றும் ஓபியோர்ஹைசா பெமே (Ophiorrhiza pemae) ஆகிய இரண்டு புதிய தாவரச் சிற்றினங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.

அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

- 2025 ஆம் ஆண்டு ஜூலை முதல் 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில், இந்தியாவில் உள்நாட்டு சுற்றுலா குறித்த தனது 80வது சுற்று அறிக்கையை தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) வெளியிட்டது.
- WWF (உலகளாவிய இயற்கை நிதியம்) வெளியிட்ட வாழும் கோள் அறிக்கை 2026, 1970 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் கண்காணிக்கப்பட்ட முதுகெலும்புள்ள உயிரினங்களின் சராசரி எண்ணிக்கை அளவில் 73% வீழ்ச்சியைக் கண்டறிந்துள்ளது.
- செயற்கை நுண்ணறிவு (AI) தயார்நிலை அடிப்படையில், வளர்ந்து வரும் சந்தை கொண்ட நாடுகளில் சிறந்த செயல்பாடு கொண்ட முதல் 10 நாடுகளில் ஒன்றாக இந்தியாவை உலக வங்கி அறிக்கை ஒன்று பட்டியலிட்டுள்ளது.
- உலகளாவிய இயற்கை நிதியமானது (WWF) 2026 ஆம் ஆண்டிற்கான லிவிங் பிளானட் அறிக்கையை வெளியிட்டது
- உலக வங்கி குழுமத்தின் உலக வளர்ச்சி அறிக்கை 2026: செயற்கை நுண்ணறிவின் வாக்குறுதி (World Development Report 2026: The Promise of Artificial Intelligence) என்பதை மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் புது தில்லியில் வெளியிட்டார்.

- ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் (UNDP) மற்றும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் இணைந்து உலகளாவிய பலபரிமாண வறுமைக் குறியீட்டின் (MPI) சமீபத்திய புதுப்பிப்பை வெளியிட்டன
- வெல்துங்கர்ஹில்ஃப் (WHH), ஹெல்வெட்டாஸ் மற்றும் அமைதி மற்றும் ஆயுத மோதலுக்கான சர்வதேச சட்ட நிறுவனம் (IFHV) ஆகியவற்றால் வெளியிடப்பட்ட உலகளாவிய பட்டினிக் குறியீடு 2026 (GHI) ஆனது, உலகளாவிய பட்டினி மதிப்பெண்ணை 18.1 எனப் பதிவு செய்துள்ளது.
- சர்வதேச நாணய நிதியமானது (IMF) அதன் உலகப் பொருளாதாரக் கண்ணோட்ட (WEO) அறிக்கையை வெளியிட்டது.
- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) 2026 ஆம் ஆண்டிற்கான உமிழ்வுகள் இடைவெளி அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- கல்வி அணுகல் குறித்த 2026 ஆம் ஆண்டின் GEM (உலகளாவிய கல்விக் கண்காணிப்பு) பாலின அறிக்கையை யுனெஸ்கோ வெளியிடப்பட்டுள்ளது.

அறிக்கைகள்	நிறுவனம்	உயர்மட்ட நிலை	தாழ்மட்ட நிலை	இந்தியாவின் நிலை
உலகளாவிய புத்தாக்கக் குறியீடு 2026	உலக அறிவுசார் சொத்து அமைப்பு	ஸ்விட்சர்லாந்து	–	**38**
சட்டத்தின் ஆட்சி குறியீடு	உலக நீதித் திட்டம்	டென்மார்க்	–	**88**

மாநிலச் செய்திகள்

- அலிகாரில் இந்தியாவின் முதல் பூட்டு அருங்காட்சியகத்தை உத்தரபிரதேசம் அமைக்க உள்ளது.
- MICE (கூட்டங்கள், ஊக்கத்தொகைகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள்) ஊக்கத் தொகைகளுக்கான இந்தியாவின் முதல் பிரத்யேக டிஜிட்டல் இணையதளத்தை ஒடிசா தொடங்கியுள்ளது.
- மேற்கு வங்காளம் அதன் மாநிலத்தின் பெயரை "பஸ்சிம் பங்கா" என்று மாற்ற முன்மொழிந்துள்ளது
- ULLAS திட்டத்தின் கீழ் 2026 ஆம் ஆண்டில் இந்தியாவின் 6வது முழுமையான எழுத்தறிவு பெற்ற மாநிலமாக உத்தரகாண்ட் அறிவிக்கப்பட்டுள்ளது.
- லடாக்கில் பனிச்சிறுத்தை தடங்களை மையமாகக் கொண்ட இந்தியாவின் முதல் உயரமான பகுதியின் இரவுநேர வனவிலங்கு உலாவினை தொடங்கப்பட்டுள்ளது.
- ULLAS திட்டத்தின் கீழ் லட்சத்தீவு 100% கல்வியறிவு பெற்ற ஒன்றியப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டது.
- இந்தியாவின் முதல் 100% இயற்கை வேளாண்மைக்கான ஒன்றியப் பிரதேசமாக லடாக் அறிவிக்கப்பட்டது.
- கேரள சிவில் விமானப் போக்குவரத்து மேம்பாட்டுக் கூட்டுறவுச் சங்கம் மூலம் இந்தியாவின் முதல் கூட்டுறவுத் துறை விமானச் சேவையாக முன்மொழியப்பட்ட 'கோ-கேரளம்' (Co-Keralam) என்ற விமானச் சேவையைத் தொடங்க கேரளா ஒப்புதல் அளித்துள்ளது.

- அர்னாப் புயல், மிகக் கடுமையான புயலாக ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஏனாம் கடற்கரையை ஒட்டி கரையைக் கடந்தது.
- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள சியாங் நதியில் இந்த 11,200 மெகாவாட் (MW) சியாங் மேற்பகுதி பன்முக நோக்குத் திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.
- ஜார்க்கண்டின் பாரம்பரிய நாட்டுப்புற தாள வாத்தியமான மந்தருக்கு (Mandar) சென்னையில் உள்ள புவிசார் குறியீட்டுப் பதிவேட்டில் இருந்து புவிசார் குறியீடு (Geographical Indication - GI) வழங்கப்பட்டுள்ளது.

முன்னெடுப்புகள், திட்டங்கள் மற்றும் பிரச்சாரங்கள்

பெயர்	அமைச்சகம்/அமைப்பு	நோக்கம்
பிரகதி-50 முன்னெடுப்பு	வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்	24 மாநிலங்களில் உள்ள 50 மாதிரி நகரங்களை உருவாக்குதல்
PM-Developing Harmonized and Accelerated Renewable-energy Access (PM-DHARA)	புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம் & மின்சக்தி அமைச்சகம்	மாநிலத்திற்கு இடையேயான மின் பரிமாற்ற அமைப்புகளை வலுப்படுத்துதல்
மின்னணு பொது விநியோக முறைக்கான (ePDS) முக அங்கீகாரம்	UIDAI, உணவு மற்றும் பொது விநியோகத் துறை மற்றும் தேசிய தகவல் மையம்	–
SWIK இணையதளம் 2.0 மற்றும் துணை-AUA/ துணை-KUA (LITE) கட்டமைப்பு	UIDAI	தகுதியான நிறுவனங்களுக்கு ஆதார் அங்கீகாரத்தை ஆதரித்தல்
தேசிய கடலோரத் திட்டம் (NCM) 2.0	சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்	கடலோர மீள்தன்மை மற்றும் நிலைத்தன்மையை வலுப்படுத்துதல் மற்றும் நீலப் பொருளாதாரத்தை ஆதரித்தல்
பிரதம மந்திரி விக்சித் கிராம் ஸ்வராஜ் யோஜனா திட்டம்	பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம்	ஊரக உள்ளாட்சி நிர்வாகத்தை வலுப்படுத்துதல்

பிரபலமானவர்கள் மற்றும் விருதுகள்

நபர்	தொடர்புடைய துறைகள்	குறிப்பு
போதனா சிவானந்தன்	சதுரங்க வீரர்	மிகக் குறைந்த வயதில் கிராண்ட்மாஸ்டர் (WGM) ஆன பெண்
எஸ்ஸாஹ்ரா எல் மன்சூரி	–	மொராக்கோவின் முதல் பெண் பிரதமர்
அசுதோஷ் தீட்சித்	ஏர் மார்ஷல்	இந்திய விமானப்படையின் (IAF) 29ஆவது தளபதி

பரிசு / விருது	விருது பெற்றவர்	தொடர்புடைய துறை
சாஸ்த்ரா–ராமானுஜன் விருது	சாரா பெலூஸ்	ஸ்டான்போர்டு பல்கலைக் கழக கணிதவியலாளர்
2026 Ig நோபல் பரிசுகள்	**மருத்துவம்** – டோகுஜி உன்னோ **உயிரியல்** – ஜோவாவோ மிகுவல் ஆல்வ்ஸ்-நூன்ஸ் **வேதியியல்** – சஞ்சாரி பானர்ஜி, நாதன் கௌசென்ஸ்	–
மருத்துவத்திற்கான நோபல் பரிசு 2026	கார்ல் டெய்செரோத், பீட்டர் ஹெஜ்மேன் மற்றும் ஜார்ஜ் நாகல்	ஒளிக் கட்டுப்பாட்டு அயனி தடங்கள் (light-gated ion channels) மற்றும் ஆப்டோஜெனெடிக்ஸ் (optogenetics) தொடர்பான கண்டுபிடிப்பு
இயற்பியலுக்கான நோபல் பரிசு 2026	பிரான்சிஸ் ஹால்சென்	ஐஸ்கியூப் (IceCube) நியூட்ரினோ ஆய்வகத்திற்கான பங்களிப்புகள்
வேதியியலுக்கான நோபல் பரிசு 2026	ஹென்றி பி. ககன் மற்றும் கென்சோ சோய்	சமச்சீரற்ற கரிமத் தொகுப்பில் நேரியல் அல்லாத விளைவுகள் மற்றும் தன்னியக்க வினையூக்கம் தொடர்பான கண்டுபிடிப்பு
இலக்கியத்திற்கான நோபல் பரிசு 2026	அன்னே கார்சன்	கனடா நாட்டு இலக்கிய வல்லுநர்
அமைதிக்கான நோபல் பரிசு 2026	நவநீதம் "நவி" பிள்ளை	தென்னாப்பிரிக்க சட்ட நிபுணர்
ராமானுஜன் பரிசு 2026	பேராசிரியர் மகேஷ் காக்டே	இயற்கணித எண் கோட்பாட்டிற்கான பங்களிப்பு
பொருளாதார அறிவியலுக்கான நோபல் பரிசு 2026	ராபர்ட் இ. ஹால் மற்றும் மைக்கேல் உட்ஃபோர்ட்	பேரியல் பொருளாதார நிலைப்படுத்தலின் நுண்பொருளியல் அடித்தளங்கள் குறித்த அவர்களின் பணிகளுக்காக
பிரான்சின் 'நைட் ஆஃப் தி நேஷனல் ஆர்டர் ஆஃப் தி லெஜியன் ஆஃப் ஹானர்' விருது	சுனில் பார்தி மிட்டல்	பார்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் நிறுவனர், தலைவர்
2026 ஆம் ஆண்டின் இளம் வனவிலங்கு புகைப்படக் கலைஞர் விருது	ஆஸ்கார் விட்ஃபீல்ட் (14)	இங்கிலாந்து புகைப்படக் கலைஞர்
யூரோபிசிக்ஸ் பரிசு 2026	ஜைரோ சினோவா, லிபோர் ஸ்மெஜ்கல் மற்றும் தாமஸ் ஜங்வொர்த்	மாற்றுக்காந்தவியலை (altermagnetism) நிறுவியதற்காக

சிந்தனை சுதந்திரத்திற்கான சாகரோவ் விருது 2026	சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம்	–
உலக உணவுப் பரிசு 2026	**அமீனா நஸ்ரின் ஏ.எஸ்**	–
டாக்டர் பூபன் ஹசாரிகா தேசிய விருது 2026	**உஷா மங்கேஷ்கர்**	இந்தியப் பின்னணிப் பாடகி
விளையாட்டுக்கான பிரின்சஸ் ஆஃப் அஸ்டூரியாஸ் விருது	லியோனல் மெஸ்ஸி	இந்த விருதினைத் தனிநபராக வெல்லும் முதல் கால்பந்து வீரர்
ஆஸ்கார் க்ளீன் பதக்கம் 2026	அசோக் சென்	இந்த விருதைப் பெறும் முதல் இந்திய இயற்பியலாளர்

நிகழ்வுகள் மற்றும் மாநாடுகள்

- 2032 ஆம் ஆண்டில் முதன்முறையாக UCI சாலை மிதிவண்டி உலக சாம்பியன்ஷிப் போட்டிகளை இந்தியாவில் நடத்த மகாராஷ்டிராவின் புனே நகரம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- குற்றத் தடுப்பு மற்றும் குற்றவியல் நீதி தொடர்பான 15வது ஐக்கிய நாடுகள் மாநாடானது ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் நடைபெற்றது .
- சர்வதேச திமிங்கல ஆணையத்தின் 70வது கூட்டமானது (IWC-70), ஆஸ்திரேலியாவின் ஹோபார்ட்டில் நடைபெற்றது.
- விவசாயம் மற்றும் கிராமப்புற வாழ்வாதாரங்களில் பெண்களின் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காக இந்தியாவின் முதல் பெண் விவசாயத் தொழிலாளர் மாநாடு புது தில்லியில் நடைபெற்றது.
- சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தின் (IPU) 153 வது சபைக் கூட்டமானது தான்சானியாவின் அருஷாவில் நடைபெற்றது
- பயங்கரவாதம் மற்றும் நாடுகடந்த குற்றங்களுக்கு எதிரான 11வது பிம்ஸ்டெக் கூட்டுச் செயற்குழு (JWG-CTTC) கூட்டம் புது தில்லியில் இந்தியாவை தொகுத்து வழங்குபவராகக் கொண்டு நடைபெற்றது.
- பசிபிக் முன்கூட்டிய COP31 (Pre-COP31) பருவநிலைக் கூட்டம் பிஜியின் நாடியில் (Nadi) நடைபெற்றது.
- 10வது இந்திய மொபைல் காங்கிரஸ் (IMC) 2026 புது தில்லியில் "எல்லைகளற்ற விரிவாக்கம்" என்ற கருத்துருவின் கீழ் நடைபெற்றது.
- சாகர்மந்தன்: பெருங்கடல் உரையாடலின் மூன்றாவது பதிப்பு 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 7 முதல் 9 ஆம் தேதி வரை புதுதில்லியில் நடைபெற்றது, இதில் சுமார் 75 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றனர்.
- மூன்றாவது சர்வதேச பாரத் 6G கருத்தரங்கம் 2026 ஆனது புது தில்லியின் துவாரகாவில் முடிவடைந்தது.
- வின்டர்ஜி இந்தியா 2026-இன் 8வது பதிப்பு சென்னையில் நடைபெற்றது

- வேளாண்-உணவு அமைப்புகளுக்கான செயற்கை நுண்ணறிவு குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய முன்னெடுப்பின் (GI-AI4FS) இரண்டாவது கூட்டத்தை புது தில்லியில் இந்தியா நடத்தியது.
- பிம்ஸ்டெக் அமைப்பின் முதலாவது உள்துறை அமைச்சர்கள் கூட்டம் 2026 ஆம் ஆண்டிற்கான டெல்லி பிரகடனத்தை ஏற்றுக்கொண்டதோடு புதுடெல்லியில் நிறைவடைந்தது.
- உலக சுகாதார உச்சி மாநாடானது ஜெர்மனியின் பெர்லினில் "From Crisis to Resilience: Innovating for Health" எனும் கருத்துருவின் கீழ் நடைபெற்றது.
- 25வது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) அரசுத் தலைவர்கள் சபைக் கூட்டமானது தஜிகிஸ்தானின் துஷான்பேவில் நடைபெற்றது.
- அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம் (AIIA) ஏற்பாடு செய்த கௌமாரபிருத்யா குறித்த 3வது சர்வதேச மாநாடு (KAUMARACON-2026) "Shaping the Future of Child Health: Global Perspectives, Research Innovations, and Clinical Frontiers in Kaumarabhritya" எனும் கருத்துருவின் கீழ் புதுடெல்லியில் நடைபெற்றது.
- உயிரியல் பன்முகத்தன்மை தொடர்பான மாநாட்டின் (CBD) 17வது தரப்பினரின் மாநாடு (COP17) ஆர்மீனியாவின் யெரெவானில் தொடங்கியது.
- ஆசியாவில் தொடர்பு மற்றும் நம்பிக்கை வளர்க்கும் நடவடிக்கைகளுக்கான மாநாட்டின் (CICA) 7 வது உச்சிமாநாடு அஜர்பைஜானின் பாகுவில் நடைபெற்றது.
- 2026 ஆம் ஆண்டிற்கான 7-வது வேளாண்-ஒளிமின்னழுத்தங்கள் உலகளாவிய மாநாட்டை இந்தியா புது தில்லியில் நடைபெறுவதுடன் இம்மாநாடு உலகளாவிய தெற்கில் நடைபெறுவது இதுவே முதல்முறையாகும்.
- தேசிய நகர்ப்புற மாநாடு 2026 ஒடிசாவின் புவனேஸ்வரில் நடைபெற்றது.
- 12வது பிரிக்ஸ் நாடாளுமன்ற மன்றம், "Fostering Parliaments for People-Centric Development" என்ற கருத்துருவின் கீழ் புது தில்லியில் நடைபெற்றது.
- 13 வது ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டம்-பிளஸ் (ADMM-Plus) பிலிப்பைன்ஸின் செபுவில் உள்ள லாபு-லாபு நகரில் நடைபெற்றது.

பாதுகாப்பு பயிற்சிகள் மற்றும் நடவடிக்கைகள்

பெயர்	பங்கேற்கும் நாடுகள்/நடத்தும் அமைப்பு	நடைபெற்ற இடம்
KAZIND-2026	இந்தியா- கஜகஸ்தான்	கஜகஸ்தான்
2ஆவது ஆசியான்-இந்தியா கடல்சார் பயிற்சி (AIME-2026)	இந்தியா மற்றும் 8 ஆசியான் நாடுகள்	பிலிப்பைன்ஸ்
Mountain Guardian 2026 ராணுவப் பயிற்சி	இந்தியா - ஐக்கிய அரபு அமீரகம்	உத்தரகாண்ட்
12வது தேசிய கடல்சார் தேடல் மற்றும் மீட்புப் பயிற்சி (SAREX-2026)	இந்திய கடலோர காவல்படை	ஒடிசா

கொங்கன் பயிற்சி 2026	இந்தியா – இங்கிலாந்து கடற்படை	இங்கிலாந்து
IBSAMAR கூட்டு ராணுவப் பயிற்சி	இந்தியா, பிரேசில் மற்றும் தென்னாப்பிரிக்கா	தென்னாப்பிரிக்கா
AUSTRAHIND கூட்டு ராணுவப் பயிற்சி	இந்தியா - ஆஸ்திரேலியா	கேரளா
அகண்ட் பிரஹார்-II (Akhand Prahar-II)	இந்திய ராணுவம்	ராஜஸ்தான்
33-வது SIMBEX கடல்சார் பயிற்சி	இந்தியா - சிங்கப்பூர்	விசாகப்பட்டினம்
ரம்மி	பிரான்ஸ் - ஐக்கிய பேரரசு	மத்திய தரைக்கடல்

விளையாட்டுச் செய்திகள்

- 1984 ஆம் ஆண்டில் பி.டி. உஷா படைத்த 55.42 வினாடிகள் என்ற 42 ஆண்டுகால சாதனையை முறியடித்து, பெண்களுக்கான 400 மீட்டர் தடை ஓட்டத்தில் வித்யா ராம்ராஜ் 54.75 வினாடிகளில் கடந்து புதிய தேசிய சாதனையைப் படைத்தார், இந்த சாதனையானது 2026 ஆம் ஆண்டிற்கான உலகப் பட்டியலில் 33வது இடத்தைப் பிடித்து உள்ளது.
- உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் நடைபெற்ற 46வது செஸ் ஒலிம்பியாட் போட்டியில் ஒட்டு மொத்தமாக சிறந்த நாடாகத் திகழ்ந்து நோனா கப்ரிண்டாஷ்விலி கோப்பையை இந்தியா தக்க வைத்துக் கொண்டது.
- ஜப்பானின் ஐச்சி-நகோயாவில் நடைபெற்ற 20வது ஆசிய விளையாட்டுகள் 2026 -இல் இந்தியா 24 தங்கம், 29 வெள்ளி மற்றும் 32 வெண்கலம் என மொத்தம் 85 பதக்கங்களுடன் 4வது இடத்தைப் பிடித்தது.
- வித்யா ராம்ராஜ் (தடகளம்) தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம் வென்றார், இதன் மூலம் ஒரே ஆசிய விளையாட்டில் மூன்று பதக்கங்களை வென்ற முதல் தமிழக விளையாட்டு வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார்.
- கொல்கத்தா, 2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11 முதல் 18 ஆம் தேதி வரை 19 வது உலக சுடோகு சாம்பியன்ஷிப் மற்றும் 33 வது உலகப் புதிர் சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்றன.
- அமெரிக்காவின் லாஸ் வேகாஸில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு U23 உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் தொடரின் ஆடவர் 55 கிலோ கிரெக்கோ-ரோமன் பிரிவில் இந்திய மல்யுத்த வீரர் விஸ்வஜித் ராமச்சந்திர மோர் வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- இங்கிலாந்தின் கிரேட் விர்லியில் நடைபெற்ற WBL உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீரர் பங்கஜ் அத்வானி தனது 29 ஆவது உலக பட்டத்தை வென்றார்.
- 2029 ஆம் ஆண்டு நடைபெறும் சீனியர் உலக பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியை அகமதாபாத் நடத்துவதுடன் சீனியர் பிரிவிலான இப்போட்டியை இந்தியா நடத்துவது இதுவே முதல் முறை ஆகும்

முக்கிய தினங்கள்

தேதி	முக்கிய நாள்	கருத்துரு
அக்டோபர் 01	முதியோர்களுக்கான சர்வதேச விழிப்புணர்வு தினம்	The Age of Longevity: Rethinking Systems for Longer Lives
அக்டோபர் 02–08	வனவிலங்கு வாரம்	Connecting Habitats and Thriving Wildlife
அக்டோபர் 02	சர்வதேச அகிம்சை தினம்	–
அக்டோபர் 04	உலக விலங்குகள் தினம்	See the World Through Their Eyes
அக்டோபர் 05	உலக வாழ்விட தினம்	Adequate Housing for All
அக்டோபர் 05	உலக ஆசிரியர்கள் தினம்	Standing with teachers: 60 years of protecting the profession, advancing its status and shaping our futures
அக்டோபர் 06	உலக பெருமூளை வாத தினம்	Unique and United
அக்டோபர் 07	உலக பருத்தி தினம்	Cotton for Good: Building Prosperity Through Trade, Transformation and Partnership
அக்டோபர் 04–10	உலக விண்வெளி வாரம்	Rocket Revolution
அக்டோபர் 09	உலக அஞ்சல் தினம்	World Post Day: One Postal Network, Infinite Possibilities
அக்டோபர் 10	உலக வலசை போகும் பறவைகள் தினம்	Every Bird Counts – Your Observations Matter!
அக்டோபர் 10	உலக மனநல தினம்	Lived Experiences Heard: Real Voices, Real Change
அக்டோபர் 11	சர்வதேச பெண் குழந்தை தினம்	End child marriage and invest in girls' rights!
அக்டோபர் 14	உலக தர நிர்ணய தினம்	Shared Vision for a Better World: Spotlight on Sustainable Development Goal 7 (Affordable and Clean Energy)
அக்டோபர் 15	உலக கை கழுவும் தினம்	Be a Handwashing Hero
அக்டோபர் 15	சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினம்	Rural Women Farmers Caring for Mother Nature
அக்டோபர் 16	உலக உணவு தினம்	Innovate today. Nourish tomorrow
அக்டோபர் 17	சர்வதேச தேன் உண்ணும் கரடி தினம்	Sloths Wild and Free
அக்டோபர் 17	சர்வதேச வறுமை ஒழிப்பு தினம்	Safe Homes for All" under the 2026–2028 theme "United for Peace and Human Rights
அக்டோபர் 20	உலகப் புள்ளிவிவர தினம்	–

அக்டோபர் 23	சர்வதேச பனிச்சிறுத்தை தினம்	–
அக்டோபர் 24	ஐக்கிய நாடுகள் தினம்	–
அக்டோபர் 24	உலக போலியோ தினம்	Together, We End Polio
அக்டோபர் 26 முதல் நவம்பர் 01	ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம்	Probity for Prosperity
அக்டோபர் 27	இந்திய காலாட்படை தினம்	–
அக்டோபர் 31	தேசிய ஒற்றுமை தினம்	Ek Bharat Shreshtha Bharat
அக்டோபர் 1 – 31	மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதம்	Every Story Is Unique, Every Journey Matters
அக்டோபர் 1 - 31	தேசிய இணையப் பாதுகாப்பு விழிப்புணர்வு மாதம்	Build a Culture of Cyber Hygiene

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★